புதுமலர்: 21 இதழ்: 05 புரட்டாதி - ஐப்பசி

# அனல்

01.09.2024

ஆசிரியர்:
போதகர் வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## அழைப்பை காத்துக் கொள்ளுங்கள்!



சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. வினா விடை - 123
06. குறுக்கெழுத்துப்போட்டி - 121
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. தேவன் தந்த வைரங்கள்
12. பக்தர்கள் பயிலகம்
13. தேவன் எதற்காக படைத்தார்


## ஜெப வேண்டுதல்



வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அனல் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த நாட்களில் கர்த்தருக்காக எப்படி வாழ்ந்தீர்கள், அவருக்காக என்ன செய்தீர்கள். உங்களை தேவனுக்குள் காத்துக் கொள்வதும், தேவனுக்காய் செயலாற்றுவதும் நல்லது. நாம் குணப்படுவதும் மற்றவர்களைக் குணப்படுத்துவதும் இயேசு எம்மில் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பாகும்.

இவ்வருடத்தின் எட்டு மாதங்கள் சென்றுவிட்டன. எம்மை நாம் கர்த்தருக்குள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களை தேவனுக்குள் திடப்படுத்துங்கள். மற்றவர்களை உற்சாகப்படுத்தி கர்த்தருக்குள் நிலைக்கச் செய்யுங்கள். ஆத்துமாக்களைக் குறித்து தேவனுக்கிருக்கும் ஏக்கத்தைப் பூர்த்தி செய்ய அவருடைய அன்பைச் சொல்லுங்கள். தேவன் உங்களுக்குரியதை தருவார். ஆசீர்வதிப்பார். கர்த்தருக்குள் முன்னேறுங்கள்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உன்னை இழந்துவிடாதே

❒ வை. விமலதாஸ்

ஒரு ஆசிரியர் 15 ஆண்டுகள் கழித்து தனது மாணவர்கள் அனைவரையும் பார்க்க வேண்டும் என்று அழைத்திருந்தார். அனைவரும் அவர் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் மிகவும் பிரபலமானவர்கள். அரசியல், போலீஸ், தொழிலதிபர், பேப்பர்கடை வைத்திருப்பவர், துணிக்கடை வைத்திருப்பவர், அரசாங்க அதிகாரி என்று பல துறைகளில் பெரிய ஆட்களாக இருந்தார்கள்.

அனைவருமே இது ஒரு அழகான வாய்ப்பாக கருதி ஒன்றாக வந்து சேர்ந்தார்கள். துணி வியாபாரி அரசாங்க அதிகாரியிடம் சென்று எப்படிடா இருக்கிறாய் என்றும் பேப்பர்காரன் போலீஸ் அதிகாரியிடம் என்னடா இவ்வளவு குண்டு ஆயிட்ட என்றும் பேசினார்கள். ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களுக்கு பேச்சு வரவில்லை அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். அதுவரை அந்த ஆசிரியர் அங்கு வரவே இல்லை.

வந்திருந்த மாணவர்கள் அனைவருக்கும் தேநீர் தயார் செய்து கொண்டிருந்தார். சுடச்சுட தேநீரோடு சிலவகை கோப்பைகளை எடுத்துக் கொண்டு வந்தார். அனைவரும் ஆசிரியர் வந்ததும் எழுந்து நின்று தேநீர் வாங்க அங்கே இருந்த கோப்பைகளை எடுக்க செய்தார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கோப்புகளை தேர்வு செய்தார்கள்.

ஒவ்வொருவரும் சில்வர், மண், பீங்கான், வெள்ளி, கண்ணாடி போன்ற விதம்விதமான கோப்பைகளை தேர்வு செய்தார்கள். ஆசிரியர் இதை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தார். அதன் பின் ஆசிரியர் அவர்களைப் பார்த்து; எல்லோரும் இப்பொழுது நான் கேட்கப்போகும் கேள்விக்கு உண்மையாக பதில் சொல்லுங்கள். இங்கு எல்லோரும் சேர்ந்து அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் அனைவரும் ஒரேவிதமான மகிழ்ச்சியோடு இருக்கிறீர்களா? என்று கேட்டார். அனைவருக்கும் அப்போதுதான் புரிந்தது, இல்லை சேர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் படிக்கும் போது இருந்த ஆர்வமும் மகிழ்ச்சியும் இப்போது இல்லை. ஏதோ ஒன்று தடுக்கிறது. ஆனால் அது என்ன என்று எங்களால் கூற முடியவில்லை. இதோ என் அருகில் இருப்பவனிடம் நான் பயங்கரமாக விளையாடி இருக்கிறேன், ஆனால் இன்று ஏதோ ஒன்று அவனை நெருங்க முடியாமல் தடுக்கிறது என்று கூறினார். இந்தப் பாடத்தை புரிய வைக்கவே தான் நான் உங்களை அழைத்தேன்.

நீங்கள் அனைவரும் வெவ்வேறு துறையில் ஒவ்வொரு பதவியில் வாழ்ந்து கொண்டிருக்கலாம் ஆனால் நீங்கள் அனைவரும் வாழ வேண்டியது உங்களது வாழ்க்கையைத்தான். ஆனால் நீங்கள் எல்லோரும் உங்கள் துறையைதான் நம்பி மதிப்பதால் மற்றவர்களிடம் நெருங்க முடியவில்லை உங்கள் தகுதி – துறை என்பதும் உங்கள் வாழ்க்கை என்பதும் வேறு வேறு.

தேநீர் கோப்பைகள் போல உங்களது பதவிகள் அலங்காரமாக வேறுவேறு ஆக இருந்தாலும் நமக்கு தேவை அதில் உள்ளே இருக்கும் தேநீர் தான். அதுபோல் நாம் பதவிகளில் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் நமது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் அந்த மகிழ்ச்சி நம் அனைவருக்கும் உள்ளத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

உங்கள் பதவிகளை தகுதிகளை வீட்டிற்குள் நுழையும்போதே கழட்டி வைத்து விடுங்கள் அன்பாகவும் மகிழ்ச்சியாகவும், வீட்டில் ஒருவனாகவும் வாழ கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். அனேக பெரிய இடங்களில் மகிழ்ச்சி இருப்பதில்லை ஆனால் சிறிய குடிசையில் சந்தோஷத்தோடு சிரிப்பொலிக்கு இருக்கும்.

அவர்கள் சிரிப்பதற்கு எந்த பதவியும் பணமும் தடுக்கவில்லை வசதியான வர்கள் தங்கள் பதவிகளை நினைத்து தங்கள் திறமைகளை நினைத்து இல்லத்தில் இன்பமாக இருக்க முடியாமல் தவிக்கிறார்கள்.. நீ வெளியில் பெரிய அதிகாரியாக இருக்கலாம் வீட்டுக்குள் உன் குழந்தைக்கு தந்தையாக உன் மனைவிக்கு கணவனாக உன் அப்பா அம்மாவுக்கு குழந்தையாக மாறி நடந்து பார் உன்னுடைய வாழ்வு இனிக்கும்.

உன் பதவி அதிகாரத்தை உன் இல்லத்துக்குள் நுழைக்காதே உன் இன்பமான வாழ்க்கை எனும் தேநீர் உனக்கு கிடைக்காமல் போய்விடும்....

ஆம் நண்பர்களே பார்த்தீர்களா? நாமும் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு, மற்றவர்களோடு சமமாக பழகி உறவாடுகின்றோமா? உலக காரியங்களுக்காக நம்முடைய வாழ்க்கையை தொலைத்திருக்கிறோமா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

**லூக்கா 9:25 மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத் தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள்!

**'கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்'** என்ற வசனத்தின்படியாக தேவன் இதுவரை உங்களுடைய விண்ணப்பங்களைக் கேட்டு உங்களை புறக்கணிக்காமல் தம்முடைய கிருபையினாலே அணைத்து நடத்தி வந்தார். அவருடைய நாமத்திற்கே மகிமையுண்டாகட்டும். ஆமென்.

**சங்கீதம் 69:19 தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர். என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்கள்.**

எம்முடைய நாளாந்த கிறிஸ்தவ வாழ்க்கையிலே நாம் எல்லோரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சில நிந்தனைகளுக்கும், வெட்கத்திற்கும், அவமானத்திற்கும் முகங்கொடுத்திருக்கிறோம். விரும்பியோ விரும்பாமலோ தேவன் எம்முடைய வாழ்க்கையிலே இவைகளை அனுமதிக்கிறார்.

நாம் பாவம் செய்வதனால் அல்லது தேவனைவிட்டு ஒரு பின்மாற்றமான வாழ்க்கை வாழ்வதனால் உண்டாகின்றதான வெட்கமோ, அவமானமோ, நிந்தனையோ அல்ல மாறாக தேவனுக்காக ஜீவிக்கின்ற, சாட்சி வாழ்க்கை வாழ்கின்ற வேளைகளிலே ஏற்படுகின்றதான நிந்தனைகள், வெட்கங்கள், அவமானங்களை தேவன் மகிமையானதாக முடியப்பண்ணுவார். ஏனென்றால் அவர் தலை நிமிரச் செய்கின்ற தேவன். வெட்கப்பட்டது ஒரு இடம், தலை நிமிரச் செய்வது இன்னொரு இடமல்ல. **குறித்த இடத்திலே தான் தலை நிமிரச் செய்வார்.**

**சங்கீதம் 69:20 நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது: நான் மிகவும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்.**

அன்பான சகோதரனே, சகோதரியே உங்களுடைய வாழ்க்கையில் நீங்களும் சில நிந்தனைகளுக்கு முகங்கொடுப்பதினாலே என்னசெய்வதென்று தெரியாமல் கலங்கிப்போய் நிற்கின்றீர்களா? இருதயம் உடைந்த நிலையில் வேதனையோடு, யாராவது ஆறுதல் சொல்லமாட்டார்களா? என்னை நம்பமாட்டார்களா? கொஞ்சமாவது புரிந்து கொள்ள அல்லது விளங்கிக் கொள்ளமாட்டார்களா? என எதிர்பார்த்துக் கொண்டிருந்து நொந்துபோய் ஏமாற்றத்தோடிருக்கின்றீர்களா?

பயப்படாதீர்கள்! கலங்காதீர்கள்! உங்களுக்கு ஓர் நற்செய்தி. தேவன் உங்களுடைய எல்லா நிந்தனைகளையும் புரட்டிப்போடுவார். இயேசு கிறிஸ்துவை நிந்தித்து தூஷித்தார்கள். ஆனாலும் பிதாவாகிய தேவன் இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக மகிமைப்படுத்தினார்.

எகிப்தின் நிந்தையை இஸ்ரவேல் மக்களிடமிருந்து தேவன் புரட்டிப் போட்டார். எனவே பிரியமானவர்களே, தேவன் கிரியை செய்ய ஒரு காலமுண்டு. பொறுமையோடு காத்திருங்கள்.

**யோசுவா 5:19 கர்த்தர் யோசுவாவை நோக்கி: இன்று எகிப்தின் நிந்தையை உங்கள்மேல் இராதபடிக்கு புரட்டிப்போட்டேன் என்றார்.**

**தேவன் எல்லாவற்றையும் மிக நேர்த்தியாக செய்து முடிப்பார்.**

கடந்த காலங்களில் அல்லது தற்போது நடந்த சில சம்பவங்களினாலே வெட்கத்தை சுமந்து கொண்டிருக்கும் மகனே, மகளே;

**செப்பனியா 3:19b அவர்கள் வெட்கம் அநுபவித்த சகலதேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்.** என்று கர்த்தர் சொல்கிறார்.

ஒன்றையும் குறித்து கலங்காதீர்கள். கர்த்தர் எல்லாவற்றையும் நன்மையாக முடியப்பண்ணுவார். வெட்கத்திற்குப் பதிலாக தேவனாலே உங்களுக்கு கனமுண்டாகும்.

**சங்கீதம் 71:1 கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்களுடைய வாழ்க்கையில் உண்டாகும் எந்த வெட்கமான சூழ்நிலைமைகளிலும் கர்த்தரை! ஆம் கர்த்தரை மட்டுமே நம்பியிருங்கள். தேவன் எல்லாவற்றின் முடிவையும் உங்களுக்கு மகிமையானதாக வைத்திருப்பார்.

ஒருபோதும் மனிதர்களிடம் உங்கள் வெட்கத்திற்கு பதிலில்லை. இன்னும் வெட்கமே உண்டாகும். தேவன் ஒருவரே உதவி செய்வார்.

யோசேப்பின் வாழ்க்கையை அறிந்திருக்கின்றீர்களா? கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள். போத்திபாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியால் தவறாக குற்றம் சுமத்தப்பட்ட யோசேப்பு இரண்டு ஆண்டுகள் சிறையிலே உண்மையில் குற்றம் செய்தவர் போல தான் பார்க்கப்பட்டிருப்பார். செய்யாததை செய்ததென்ற ஒரு அவமானப்பேச்சு. யாரிடம் நியாயம் சொல்வது, தன்னை நிரூபிப்பது. ஒன்றுமேயில்லை. அதிகாரத்தில் இருப்போரின் கதை மாத்திரமே கேட்கப்படும். உண்மைக்கு இடமேயில்லை. தண்டனை மட்டும் தான். ஆம்! உண்மை தூக்கு மேடையில்; பொய் அரியாசனத்தில். இந்த நிலைமைதான் யோசேப்பிற்கு. எல்லோருடைய உள்ளான பார்வையிலும் பேச்சிலும் யோசேப்பு ஓர் பெண் பித்தன்.

ஆம் அன்பானவர்களே, எல்லா அவமானத்தின் மத்தியிலும் யோசேப்பு தேவனை மாத்திரமே நம்பியிருந்தான். நேரம் வந்தது. அவமானப்படுத்தப்பட்டவனை தேவன் அரியணையில் ஏற்றினார். வெட்கம் அனுபவித்தவனை தேவன் எகிப்தின் கதாநாயகனாக மாற்றினார்.

காரணமில்லாமல் அவமானத்தை சுமந்து கொண்டிருக்கும் சகோதரனே சகோதரியே,

**சங்கீதம் 119:22a நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டகற்றும்.**

ஆம் தேவன் எல்லாவற்றையும் உங்களைவிட்டு அகற்றுவார் என்பதோடல்ல உயர்த்துவார் என்பதும் உண்மை.

பிரியமானவர்களே, அனேகர் வருகின்ற சில அவமானங்களைக் கண்டு தவறான முடிவெடுப்பார்கள். தங்களை மறைத்துக் கொள்ள யோசிப்பார்கள். தங்களுடைய சரீரத்தை கவனிக்காமல் விட்டு அதை மிகவும் பெலவீனப்பட வைத்துவிடுவார்கள்.

**ஏசாயா 50:6 அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; <u>அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும்</u> என் முகத்தை மறைக்கவில்லை.**

பிரியமானவர்களே இயேசு அவமானப்படுத்தப்படுகின்ற போது தம்முடைய முகத்தை மறைக்கவில்லை.

ஆம் நீங்களும் அவமானங்களை கண்டு அலங்கோலப்படவேண்டாம். அவமானத்தின் பின்பாகவே தேவனுடைய கனம் உண்டு என்பதை நீங்கள் மறந்து போகக்கூடாது.

பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை உயர்த்தினார். காரணம் எல்லா அவமானத்தையும் இயேசு பொறுமையோடு ஏற்றுக்கொண்டமையே.

**எபிரெயர் 18:2 அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.**

ஆம் பிரியமானவர்களே நாமும் எம்முடைய வாழ்க்கையில் வரும் வெட்கம், நிந்தை, அவமானம்என்பவற்றை ஏற்றுக்கொண்டு தாழ்மையுள்ள இருதயத்தோடு தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக வாழ்வோம். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது. எனவே பொறுமையோடு கர்த்தருக்காக காத்திருப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு கிளிகள்

ஜசிந்தா அக்கா




வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் வேட்டையாடிக் கொண்டு வரும் இறைச்சி, பறவைகள் யாவற்றையும் விற்று தனது வாழ்க்கையை நடத்தினான். ஒரு நாள் இரண்டு கிளிகளைப் பிடித்து கூட்டிற்குள் வைத்து வளர்த்து வந்தான். இரண்டு கிளிகளும் அழகாக வளர்ந்து வந்தன. சில மாதங்கள் சென்ற பின் வேட்டைக்காரனுடைய வீட்டிற்கு போதகர் ஒருவர் வந்தார். அங்கிருந்த கிளிகளைக் கண்டார். ஒரு கிளியை வாங்க வேண்டும் என்று விரும்பி அதற்குரிய பணத்தைக் கொடுத்துக் கிளியை வாங்கி வீட்டிற்கு கொண்டு சென்று அன்பாக பராமரித்து வந்தார்.

சொற்ப நாட்கள் சென்றதும் வேட்டைக்காரன் வீட்டிற்கு ஒரு குடிகாரன் சென்று அங்கிருந்த மற்றைய கிளிக்கு விலை கொடுத்து வாங்கிச் சென்றான். தேவையான உணவு வகைகள், பழங்கள் எல்லாம் கொடுத்து அந்தக் கிளியை பராமரிப்பான். காலை நேரம் வேலைக்குச் செல்வான். மாலை நேரம் நன்றாய் குடித்துவிட்டு வீட்டிற்கு வருவான். வீட்டில் மனைவி — பிள்ளைகளோடு தூஷண வார்த்தைகளாலேயே பேசி நன்றாய் சண்டை பிடிப்பான். இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த கிளியும் தூஷண வார்த்தைகளாலேயே குடிகாரனைப் போல பேச ஆரம்பித்தது.

ஒரு நாள் குடிகாரன் போதகர் வீட்டிற்குச் சென்றான். அங்கு இருந்த கிளி குடிகாரனைக் கண்டதும்; 'அல்லேலூயா Praise the Lord' என்று சொல்லிற்று. குடிகாரனுக்கோ ஒரே ஆச்சரியம்! 'எனது.... கிளி ....' என்று தனது கிளியைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி சிந்தித்தான். தனது கிளியையும் உங்கள் கிளியோடு சேர்த்துவிடலாமா என்று போதகரிடம் அனுமதி கேட்டான். அவரும் சம்மதிக்க, குடிகாரனும் தனது கிளியைக் கொண்டுவந்து போதகருடைய கிளியோடு சேர்த்துவிட்டான். அவ்வளவு தான் போதகர் வீட்டுக் கிளியும் தூஷண வார்த்தைகளையே பேச ஆரம்பித்தது.

இயேசப்பாவின் அன்புச் செல்வங்களே, நீங்கள் யாரோடு சேர்ந்து நடக்கின்றீர்கள்? என்பதில் கவனமாயிருங்கள்.

'நீங்கள் பரலோக வீட்டிற்குரியவர்கள்'

ஆகவே **எபேசியர் 4:29 கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்பட வேண்டாம்.**

## வினா விடை - 123

01. பூமியிலிருந்து வானத்தை தொட்டு நின்றது எது?
02. 'ஆண்டவரே நீர் யார்?' என்று கேட்டது யார்?
03. வானத்திலிருந்து பூமிக்கு தள்ளப்பட்டது எது?
04. தன் புருஷனை ஆண்டவன் என்று சொன்ன ஸ்திரீ யார்?
05. உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலை மட்டும் சுகவீனமாயிருந்தவர்கள் யார்?
06. 'நாங்கள் அளவுக்கு மிஞ்சிப் போகிறதில்லை' என்று சொன்னவர் யார்?
07. தன் இடுப்பில் பெலன் குடிகொண்டிருக்கும் ஒரு பிராணியின் பெயரென்ன?
08. வானத்திலிருந்து வந்து பட்டணங்களை அழித்தது எது?
09. தன் கழுத்தில் பெலன் குடிகொண்டிருக்கும் ஒரு பிராணியின் பெயரென்ன?
10. நாற்பத்திரண்டு ராஜகுலமக்களை பட்டயத்தால் வெட்டிப்போட்டவன் யார்?

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'கடலரசர் எல்லாரும் தங்கள் சிங்காசனங்களைவிட்டு இறங்கி... தங்கள் சித்திரத்தையலாடைகளை உரிந்து போடுவார்கள்' எப்போது?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 ஆடி- ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

எண்ணப்படாதது – நட்சத்திரம் (எரேமியா 31:35)

எண்ணி பேரிட்டு அழைப்பது – கர்த்தர் (சங்கீதம் 147:4)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ◈ | ◈ | | | | | 01 | ◈ |
| | ◈ | 02 | | | | | | |
| 03 | | | | | ◈ | 04 | ◈ | |
| | 05 | | | ◈ | | | | |
| | | 06 | ◈ | ◈ | | | | |
| | | 07 | ◈ | ◈ | | | | |
| | ◈ | | | | 08 | | | |
| ◈ | | | | 09 | | ◈ | 10 | |
| 13 | | | | ◈ | 12 | ◈ | ◈ | 11 |

**இடமிருந்து வலமாக**

## குறுக்கெழுத்துப் போட்டி 121

02. தண்ணீர்கள் உடைத்தோடுகிறது போல கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார் என்று இந்த ஸ்தலத்திற்கு இவ்வாறு பெயரிடப்பட்டது
03. சனகெரிப்போடிருக்கிறது மாம்சபுயம் என்று கூறியவன்
05. 'போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்' என வேண்டிக் கொண்டவன்
13. தரிசனத்தினால் பெலனற்றவன்

**வலமிருந்து இடமாக**

01. இவன் தனக்கு முன் எழுந்திராததைக் கண்டு ஆமான் உக்கிரம் நிறைந்தவனான்
06. ஐந்து முழ உயரமான எகிப்தியனின் கையிலிருந்து ஈட்டியைப் பறித்தவன்
07. 'இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்' எனக் கூறியவன்
08. 'நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக' எனக் கூறியவன்
09. யெகூவின் கட்டளைப்படி ஜன்னலிலிருந்து கீழே தள்ளப்பட்டவள்

**மேலிருந்து கீழாக**

03. இவன் மெராரியின் பேரன்
04. 24 விரல்களுள்ள நெட்டையான மனுஷனை கொன்றவன்


**கீழிருந்து மேலாக**

03. தேவனுக்கு முன்பாகத் தன் முகத்தை ஏறெடுக்க வெட்கிக் கலங்கியவன்
10. எப்பிராயீம் மலைத் தேசத்தில் உள்ள சோப்பீம் ஊரின் இன்னொரு பெயர்
11. கர்த்தர் அந்நியன் மேல் அன்பு வைத்து அவனுக்கு ....... கொடுக்கிறார்
12. இவன் பேதையான புறாவைப் போல் இருக்கிறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் வை.தேவதாஸ்




பிரியமான சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். எப்படியிருக்கின்றீர்கள்? நீங்கள் எல்லா வகையிலும் வாழ்ந்திருக்க உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.

**111யோவான் 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.**

நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பதே தேவ சித்தமாக உள்ளது. குறிப்பாக உங்கள் உடல் நலத்திற்காக ஜெபிக்கின்றேன். கிருபை உங்களோடிருப்பதாக.

தொடர்ந்தும் வாலிபர் வளாக வேத பாடத்தில் தற்பொழுது அம்னோனைக் குறித்து கற்று வருகின்றோம். அந்த வகையில் வாலிபப்பருவத்தில் இருந்த அம்னோன் தனக்குள் எழும்பிய ஆசை சரியா? பிழையா? எப்பேர்ப்பட்ட முடிவை எடுக்கலாம் என்ற குழப்பத்தில் அவன் இருந்ததனை நாங்கள் பார்த்தோம். அம்னோன் சரியான முடிவை எடுப்பதற்கு அவனுக்குப் பல வழிகள் இருந்தது. **குறிப்பாக அவன் கர்த்தரைத் தேடி அவரது வழிநடத்துதலுக்கு காத்திருக்கலாம். அப்படியில்லாதிருந்தால் தன் பெற்றோரரையோ அல்லது ஆவிக்குரிய தலைவர்களையோ நாடியிருக்க முடியும்.** ஆனால் அவன் அவைகளில் ஒன்றைக்கூட செய்யாமல் தனது உணர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை பிழையான வழியில் கொண்டு செல்லக்கூடிய ஒருவனின் புத்திமதியைக் கேட்டான்.

**11சாமுவேல் 13:3 அம்னோனுக்கு தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி.**

அவனுக்கு யோனதாப் எனும் சிநேகிதன் இருந்தான். அவன் எப்படிப்பட்டவன் என்றால் 'மகா தந்திரவாதி' என சொல்லப்படும் அளவிற்கு தந்திர புத்தியுள்ளவனாக இருந்திருக்கிறான்.

தந்திரபுத்தி என்பது அது பிசாசிற்கு உரிய செயலாகும். பல தந்திரங்கள் நிறைந்தவனாக பிசாசு காணப்படுகின்றான்.

**11கொரிந்தியர் 11:3 ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**

ஆதி மனிதர்களாகிய ஆதாம் ஏவாளை வீழ்த்துவதற்கு சாத்தான் தனது தந்திர குணத்தையே பயன்படுத்தினான். அம்னோன் வாலிபத்தின் உணர்வுகளால் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கும் பொழுது தந்திரபுத்திக் காரனாகிய யோனதாப் வந்தது போல் பிரியமான வாலிபர்களே நீங்களும் உணர்வு ரீதியாக போராடும் போது சாத்தான் தந்திரமாக உங்களை மேற்கொள்ள முயற்சி எடுப்பான். மிக அவதானமாக இருங்கள்.

**எபேசியர் 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.**

ஆகவே தேவ பிள்ளைகளே! பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள். ஆண்டவர் உங்களுக்கு துணை செய்வார். பயப்படாதிருங்கள். **அவனது அரண்களை நிர்மூலமாக்கும் வல்லமையை அவர் உங்களுக்கு தந்திருக்கிறார்.**

**11கொரிந்தியர் 2:11 சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு, அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.**

பிசாசினுடைய தந்திர புத்தியை நாம் தெரிந்திருக்க வேண்டும். அவன் மிகவும் தந்திரமாகச் செயல்பட்டு கர்த்தருடைய பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது தொடர்ந்து அதே பாவத்திற்குள்ளாக அவர்களை வழிநடத்தி மனச்சாட்சியில் அவர்களை உணர்வற்றவர்களாக மாற்றி நரகத்திற்கு செல்வதற்கு வழி வகுத்துவிடுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு சக கிறிஸ்தவர்களும் பாவத்தைக் குறித்து கண்டிக்காமல் இருப்பதனால் அதனை வைத்தே எமது சுத்த மனச்சாட்சியை கறைபடுத்துவான். பாவத்தில் விழுந்த விசுவாசியை மனரீதியில் வாதித்து மீண்டும் மீண்டும் அப் பாவத்தில் விழ வைப்பான்.

எனவே தேவ பிள்ளைகளே அவனுடைய தந்திரங்களை அறிந்து அதற்கு எதிர்த்து நில்லுங்கள். அம்னோனை பார்த்து தந்திரவாதியான யோனதாப் கேட்கிறான்:

**11சாமுவேல் 13:4 அவன் இவனைப் பார்த்து: ராஜகுமாரனாகிய நீ. நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்து போகிறாய், எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன்: என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசை வைத்திருக்கிறேன் என்றான்.**

அம்னோன் தாமாரின் மேல் உள்ள தாகத்தினால் ஏக்க வியாதி கொண்டு மெலிந்து போகத் தொடங்கினான். நாளுக்கு நாள் அம்னோனின் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து கொண்டே போனது. இதனைக் காரணமாக வைத்துக் கொண்டு யோனதாப் அவனது வாழ்வில் தலையிடப்பார்க்கின்றான். அதற்கு அம்னோனும் இடங்கொடுப்பதனைப் பார்க்கின்றோம். அவன் கேட்ட கேள்விக்கு அம்னோன் கட்டுப்பட்டு தன் இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் அவனுக்குச் சொல்லுகின்றான்.

குறிப்பாக 'ஆசை' வைத்திருக்கிறேன் என்று சொல்லி தன்னுடைய ஆசையைக் குறித்து அவனிடம் சொல்லுகின்றான். யார் மேல் ஆசை வைத்திருக்கிறான் என்று பார்த்தால்; 'சொந்த சகோதரியின்' மீது ஆசை வைத்திருக்கிறான்.

**தேவ பிள்ளைகளே இன்றும் உங்களுக்கு இருக்கும் ஆசைகளைக் குறித்து சற்று சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் வாழ்வின் முன்னேற்றத்தை நாளுக்கு நாள் சிதைக்கும் ஆசை என்னவென்று சற்று சீர்தூக்கிப்பார்த் தால் மிகவும் நலமாக இருக்கும்.**

அம்னோன் தன் சகோதரியின் மீது ஆசை வைத்திருந்த போதும் இன்னும் அதனை அனுபவிக்காதவனாகவே இருந்தான். எனவே அவன் 'தெய்வீக உதவியோடு அந்த ஆசையை மேற்கொண்டிருக்க முடியும்'. அத்தோடு 'தேவன் வைத்துள்ள அனேக நன்மையான வழிகள் மூலமாக அதனை அவன் மேற்கொண்டு ஜெயம் பெற்றிருக்கலாம்'. ஆனால் அவன் தந்திரவாதியான தன் சிநேகிதனிடம் தனது அந்தரங்க விடயங்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினான். விளைவு அவன் தந்திரமான முறையில் அம்னோன் பாவம் செய்வதற்கு வழிகாட்டியாக இருந்தான். அம்னோன் தனது ஆசையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோனதாப்பிடம் சொன்னபோது யோனதாப் சொன்ன ஆலோசனையைப் பாருங்கள். அப்பொழுது அவனது தந்திர குணம் உங்களுக்கு புலப்படும்.

**11சாமுவேல் 13:5 அப்பொழுது யோனதாப் அவனைப் பார்த்து: நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப் பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும் போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம் கொடுத்து, அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு முன்பாகச் சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று சொல் என்றான்.**

அம்னோன் தொடர்ந்து பாவத்திற்குள் விழும்படி யோனதாப் வழிமுறைகளை வகுத்துக் கொடுக்கிறான். அம்னோனை நடிக்கும்படி யோனதாப் கூறுகின்றான். எவ்வளவு வஞ்சகமான முறையில் நல்லதை தான் சொல்கிறேன் என்பதை நம்ப வைத்து விசத்தைக் குடிக்கப்பண்ணுகிறான். ஒரு ராஜகுமாரன் மதிகெட்ட காரியத்தை செய்து அழியும்படியான ஓர் துர் ஆலோசனையை அவனுக்குக் கொடுத்தான்.

**11சாமுவேல் 13:6 அப்படியே அம்னோன் வியாதிக்காரனைப்போல் படுத்துக்கொண்டு,**

மகுடியின் இசைக்கு பாம்பு ஆடுவது போல யோனதாபின் துர்ஆலோசனைக்கு ஏற்றபடி அம்னோன் செயற்படத்தொடங்கினான்.

**11சாமுவேல் 13:14 அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.**

சகோதரி முறையான ஓர் இளம்பெண்ணை கற்பழிக்கும் அளவிற்கு அம்னோன் சென்றான். சகோதர சகோதரிகளே நீங்கள் எடுக்கும் தீர்மானங்களைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள். அத்தோடு நீங்கள் யாரிடம் உங்கள் அந்தரங்க விடயங்களை பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதைக் குறித்தும் மிக அவதானமாக இருங்கள். கிருபை உங்களோடிருப்பதாக.

---



**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 122**
**நா.றமேஸ்**
**(பாண்டவெட்டை)**

**குறுக்கெழுத்துப் போட்டி - 120**
**பி.நேசமணி**
**(மானிப்பாய்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ திருமதி. V.பிலிப்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

வருடம் ஆரம்பித்து சில நாட்கள் தான் ஆகிவிட்டது போல் எண்ணும் வேளையில் அதி சீக்கிரமாக ஒன்பதாவது மாதத்திற்குள் நுழைந்து விட்டோம். பாதுகாத்து, போஷித்து, பராமரித்து நடத்தும் அவருடைய கிருபைகள் எத்தனை ஆச்சரியம்.

ஆனால் சில சகோதரிகள் யோசிக்கிறீர் கள்: எத்தனை வருடங்கள் தான் கழிந்தாலும் எங்களுடைய வாழ்க்கை மாத்திரம் எப்போதும் பிரச்சினையாகவும், குழப்பமாகவும், வியாதியாக வும், மரணப் போராட்டங்களாகவும், குறைவு களாகவும் இருக்கிறதே... இப்படிப்பட்ட வாழ்க்கை நிலமை எப்போது மாறப்போகிறது? இப்படியே என்னுடைய வாழ்க்கை முடிந்துவிடப்போகின்றதா? என்ற பல கேள்விகளோடு அங்கலாய்த்த வர்களாக இருக்கின்றீர்கள். கலங்காதீர்கள்! அவர் எல்ஷடாய்! சர்வ வல்லமையுள்ள தேவனாய் உங்களுடைய வாழ்க்கையில் கிரியை செய்ய ஆயத்தமாய் இருக்கின்றார்.

**'எல்ஷடாய் - சர்வ வல்லமையுள்ள தேவன்'** என்பது ஒரு தாயானவள் தன்னுடைய பிள்ளைக்கு என்ன காரியம்; எப்போது தேவைப் படுகிறது என்பதை அறிந்து, புரிந்து, உணர்ந்து செயற்படு கிறாளோ அதைவிட பல மடங்கு மேலாக உங்கள் மேல் கரிசனையையும் அன்பையும் காட்டும் தெய்வமாக வெளிப் படுவார்.

எங்களுடைய முற் பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடைய வாழ்க்கை யிலே கர்த்தர் ஏழு தடவைகள் **'எல்ஷடாயாக — சர்வ வல்லமையுள்ள தேவனாக'** தன்னை வெளிப்படுத்தினார். விசுவாசத்தின் தந்தை என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டவர் ஆபிரகாம் ஆனால் ஆபிரகாம் - சாராளுடைய வாழ்க்கையிலே பிள்ளை இல்லை என்ற குறை காணப்பட்டது. இது ஒன்று இரண்டு நாட்கள் அல்ல, பல ஆண்டுகளாக காணப்பட்டது. ஆனால் எல்ஷடாய் என்ற நாமத்தை உடைய சர்வ வல்லமையுள்ள தேவனை ஆபிரகாம் நம்பினார், விசுவாசித்தார்.

**ஆதியாகமம் 17:1 ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.**

ஆபிரகாம் தன்னுடைய, சாராளுடைய சரீர பெலவீனத்தை நம்பவில்லை. தான் வயது சென்றதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் அவர் பார்க்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருடைய வார்த்தையை, வாக்குத்தத்தை நம்பினார். அறிக்கையிட்டார், ஜெயமெடுத்தார். நீங்களும் உங்களுடைய வாழ்க்கையை, சரீரத்தை தாக்கி இருக்கிற பெலவீனத்தை, குறைவை பார்க்காமல் 'எல்ஷடாய்' என்ற நாமத்தை உடைய சர்வ வல்லமையுள்ள தேவனை பாருங்கள். அந்த குறைவின் மேலாக தேவனை பாருங்கள். வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள். அற்புதம் நடப்பதை பார்ப்பீர்கள்.

ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கு ஒழுக்கம் நிறைந்த ஒரு தேவ மனுஷன். ஈசாக்கின் பயபக்திக்குரியவர் என்று அழைக்கும் அளவுக்கு தகுதியான வாழ்க்கை வாழ்ந்தவர். அவருடைய தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இருந்த அதே குறை ஈசாக்கிற்கும் காணப்பட்டது. மாத்திரமல்ல ஆதியாகமம் 26:14இல் பெலிஸ்தர் அவர் பேரில் பொறாமை கொள்கின்றார்கள். மாத்திரம் அல்ல ஆதியாகமம் 26:20 இல் கேராரூர் மேய்ப்பர் ஈசாக்கு வெட்டின துரவு தங்களுடையது என்று வாக்குவாதம் பண்ணினார்கள். உங்களுக்கு ஏற்படும் அதே பிரச்சினையை முற்பிதாக்களும் கடந்தார்கள். வீணான பழி சுமத்தினார்கள், பொறாமை கொண்டார்கள். எரிச்சல் கொண்டார்கள், வாக்குவாதம் பண்ணினார்கள். ஈசாக்கு பதிலுக்கு பதில் செய்யவில்லை. எல்ஷடாய் என்ற நாமத்தையுடையவரை பற்றிக் கொண்டார்.

**ஆதியாகமம் 26:24 அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்.**

**அன்பு சகோதரிகளே பயப்படாதீர்கள். 'எல்ஷடாய்' என்ற நாமத்தை உடையவர் உங்களைக் கைவிடமாட்டார்.**

அவர் உங்கள் வாழ்க்கை மீது முழு அதிகாரம் கொண்டவர். அவருக்கு உங்கள் வாழ்க்கையை விட்டுக் கொடுங்கள், அர்ப்பணியுங்கள். **'எல்ஷடாய் - சர்வ வல்லமையுள்ள தேவன்'** உங்கள் வாழ்க்கையில் அதிசயத்தை செய்வார். ஈசாக்கின் குமாரனே யாக்கோபு. யாக்கோபின் ஜெயபெலமானவர் என்று வேதாகமம் குறிப்பிடுகின்றது. தாயின் கர்ப்பத்திலேயே தெரிவு செய்யப்பட்டவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதியாகமம் 28:13-15 (13.) அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். 14. உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். 15. நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.**

**ஆதியாகமம் 35:11 பின்னும் தேவன் அவனை நோக்கி: நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிடத்திலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்.**

வாக்குத்தத்தத்தை வாழ்க்கையிலே அனுபவமாக்கி கொண்டவராக இருந்தாலும் ஒரு கட்டத்திலே தன்னுடைய சகோதரனாகிய ஏசாவின் நிமித்தம் நிலை தடுமாறுகிறார்.

**ஆதியாகமம் 32:7 அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து:**

அருமை சகோதரிகளே உங்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் தேவனுடைய அனேக அற்புதங்களை, அதிசயங்களை கண்ணாரக்கண்டவர்களாக இருந்தாலும் சாத்தானின் சில தந்திரங்களையும், உபாயங்களையும், திட்டங்களையும் கண்டு பயப்படாமல் 'எல்ஷடாய் - சர்வ வல்லமையுள்ள தேவனின்' நாமத்தை அந்தக் காரியங்களின் மேலாய் அறிக்கையிட்டு ஜெயமெடுங்கள். வெற்றியை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். 'சர்வ வல்லமையுள்ள' என்ற வார்த்தைக்குள் 'முடியாதது' என்று எதுவும் இல்லை.

தீராத வியாதியா? மரணப்படுக்கையா? வாழ்க்கையைக் குறித்த போராட்டமா? எதுவாக இருந்தாலும் **"எல்ஷடாய் - அவர் சர்வ வல்லமையுள்ளவர்"** என்ற நாமத்தை அறிக்கை செய்து ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழுங்கள்.





**மீட்பின் ஆண்டு - 2024**

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார்.**

**மீகா 4:10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## டேவிட் செல்லப்பா
## 1905 - 1964

### கடமையில் கண்ணியம்

தூய பவுல் பள்ளி. இது சென்னையில் உள்ளது. இதன் தலைமை ஆசிரியராக 18 ஆண்டுகள் பொறுப்பேற்று நடத்தி பின் பேராயராக தென்னிந்தியத் திருச்சபையை நடத்தியவரே டேவிட் செல்லப்பா.

தலைமையாசிரியராக பணியாற்றிய காலம். ஒரு முறை பள்ளித் தமிழ் இலக்கிய மன்ற சிறப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. கல்வித்துறை அமைச்சர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். விழா தொடங்க வேண்டிய நேரத்தில் அமைச்சர் வருகை தரவில்லை. எனவே பொறுமையுடன் காத்திருந்த மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். காலம் கடந்து வந்த அமைச்சருக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. அமைச்சர் திரும்பிச் சென்றுவிட்டார். உடனடியாக அரசு உதவித் தொகை நிறுத்தப்பட்ட செய்தி ஆணையாக வந்தது.

டேவிட் செல்லப்பா இதனைக் கண்டு மனம் தளரவில்லை. உடனே விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்தார். காலம் தவறாமையைப் போதிக்கின்ற நாங்கள், பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

அமைச்சர் தன் தவறை உணர்ந்தவராக நிறுத்தப்பட்ட உதவித்தொகையை வழங்கியதோடு, அடுத்த ஆண்டு நடைபெற்ற இலக்கிய மன்ற நிகழ்ச்சியில் சரியான நேரத்தில் கலந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயர் செல்லப்பா அவர்கள் பேணிக்காத்தவை ஒழுக்கம், காலந் தவறாமை எனும் இரு பண்புகளாகும். திருச்சபைகளில் இவைகளைத் திறம்பட வலியுறுத்தினார். பணிகளில் நேர்மையுடன் கடமையாற்றுபவர்களின் நண்பராக அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

சென்னைப் பேராயத்தின் சிறந்த பேராயராக விளங்கிய இவர், சிறந்த செயல்வீரர். அவருடைய எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் சிறப்பு பெற்றவையாகும்.

**அன்பரே! கடமையும், காலந்தவறாமையும் உங்களிடம் உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: பிரசங்க பீடமானது நமது தாலந்துகளை வெளிக்காட்டும் கொலு மண்டபமாகலாம். ஆனால் ஜெப அறையோ அதற்கு மரண தண்டனை விதிக்கும்.**
**— ரேவன் ஹில் —**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜுன் 20

# தாமஸ் மூர்
# 1478 - 1535



## தீமைக்குத் துணை போகாதே...

எட்டாம் ஹென்றி இங்கிலாந்தை ஆட்சி செய்த காலம் அது. திருச்சபையின் சட்ட திட்டங்களில் அரசு அதிகமாகத் தலையிட்டது. குருக்கள் தங்கள் பணிகளைச் சரிவர கவனிக்க முடியவில்லை.

தாமஸ் மூர் நேர்மையானவர், தந்தை ஒரு நீதிபதியானதால் மூர் சகல ஒழுக்கங்களிலும் முறைப்படி வளர்க்கப்பட்டார். ஆழ்ந்த இறை பக்தி உள்ளவராகவே வளர்ந்தார். கர்த்தூசியன் என்ற மடத்தில் இணைந்து நான்கு ஆண்டுகள் வேத நூல்களை தெளிவாகப் படித்தார். தேவ அழைத்தலை உணர்ந்து கொண்ட பின்னர் திருப்பணிக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார்.

பொது வாழ்விலும் பல உயர்வுகளைப் பெற்றார். எட்டாம் ஹென்றி மன்னரின் நண்பராகவும் திகழ்ந்தார். பக்தியில் நாளுக்கு நாள் சிறந்தோங்கி வளர்ந்தார். நாள்தோறும் நான்கு முதல் ஐந்து மணி நேரமே தூங்குவார். பிற நேரங்களை வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலுமே செலவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமஸ் மூர் தனக்கென்று பணம் சேமித்ததில்லை. ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும் தாராளமாக உதவி செய்தார். எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையுடன் காணப்படுவார். நகைச்சுவை உணர்வு நிரம்பப்பெற்றவர்.

எட்டாம் ஹென்றி அரசன் தம் முதல் மனைவியைத் தள்ளிவிட்டு வேறே திருமணம் செய்யப்போகும் அறிவிப்பு திடீரென வெளியிடப்பட்டது. மேலும் தானே திருச்சபையின் தலைவர் என்றும் அறிவித்தார். எனவே, திருச்சபை சட்ட திட்டங்களுக்கு எதிராக செயல்பட்ட அரசனை தாமஸ் மூர் வெளிப்படையாகவே எதிர்த்தார். அரசாங்கத்தில் தான் வகித்து வந்த பதவியிலிருந்தும் விலகினார். இதனால் ஆத்திரம் அடைந்த அரசன், இவரைச் சிறையிலடைத்தான். 15மாத சிறைவாசத்திற்குப் பின்னும் அரசனின் விருப்பத்திற்கு ஒத்துழைக்காகததால் ஜூன் மாதம் 06ஆம் திகதி 1535ஆம் ஆண்டு தலைவெட்டப்பட்டு உயிர் துறந்தார்.

**அன்பரே! தீமையான காரியங்களுக்கு எதிர்த்து நின்று நீதியை நிலைநாட்டுகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நாம் மெல்லிய இறகு மெத்தையில் பயணம் செய்து விண்ணகம் சென்றடைய நினைக்கக்கூடாது. — தாமஸ் மூர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூன் 07**

---

# வினாவிடை 122

## சரியான பதில்கள்

01. பூமியை பிளந்து - ஆபகூக் 3:9

02. யோவாஸ் - 11இராஜாக்கள் 13:14

03. தானியேல் - தானியேல் 12:6

04. தேவன் - ஆதியாகமம் 3:21

05. எலியா - 1இராஜாக்கள் 19:9

06. பவுல் - அப்போஸ்தலர் 17:18


07. சாராள், ஆபிரகாம், ஈசாக்கு, ரெபெக்காள், லேயாள், யாக்கோபு - ஆதியாகமம் 23:19, 25:9, 49:31, 50:1

08. அகீஷார் - 1இராஜாக்கள் 4:6

09. யோயாக்கீம் - பாரூக் எழுதினான் - எரேமியா 36:22-29

10. அஞ்சனக்காரி - 1சாமுவேல் 28:13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் ஜோஹணன் டி.பிலிப்

# அழைப்பை காத்துக் கொள்ளுங்கள்!



**11 தீமோத்தேயு 2:2-6 (2.) அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. 3. நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி. 4. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். 5. மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான். 6. பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப்பங்கடையவேண்டும்.**

அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய ராஜ்யத்தில் வேலை செய்கின்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகின்ற போது சில உருவகங்களை அவனுக்கு முன்பாக வைத்து தேவனுடைய ஊழியத்தை செய்கின்ற அவருடைய பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை காண்பிக்கின்றார். இதில் நான்கு விதமான உருவகங்களைக் காண்பிக்கவிரும்புகின்றேன்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நானும் நீங்களும்: 'ராஜாக்களும் நாங்களே, ஆசாரியர்களும் நாங்களே' என்று பாடுகின்றோம். மேலே குறிப்பிட்ட வசனங்களை வாசிக்கின்றவர்களில் சிலர் இது தேவனுடைய ஊழியத்தைச் செய்கின்றவர்களுக்கு, போதகர்மார்களுக்கு மாத்திரமே! இது எங்களுக்கு அல்ல என்று சிந்தித்திருக்கலாம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக திருச்சபையில் இருக்கின்ற ஒவ்வொருவரையும் கர்த்தர் ராஜாக்களாக, ஆசாரியர்களாகவே அழைத்திருக்கின்றார். ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், மறுபடியும் பிறந்த விசுவாசியும், கிறிஸ்துவின் அன்பிற்குள்ளாய் வருகின்ற அனைவரும் ஆசாரியர்களாயும், ராஜாக்களாயும் இருக்கின்றார்கள். எப்படியோ ஏதோ ஒரு விதத்திலே ஒவ்வொருவரும் தேவனுடைய ஊழியக்காரராய் இருக்கின்றோம். ஆண்டவர் தன்னுடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பை, கிருபையை, ஈவை கொடுத்திருக்கின்றார். அதனைப் பெற்றுக் கொண்ட நாங்கள் அதனை பத்திரமாக பாதுகாக்க வேண்டியவர்கள் அல்ல, மாறாக பெற்றுக் கொண்ட இரட்சிப்பை, கிருபையை, ஈவை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும். இது தான் ஒரு ஆசாரியனுடைய வேலை. இந்த வேலையை நாங்கள் தான் செய்ய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கின்றார். இது ஒவ்வொரு விசுவாசியினுடைய கடமையாய் இருக்கின்றது. தேவனுடைய அன்பை மற்றவர்களுக்குச் சொல்வது எங்களுடைய கடமை: இரட்சிப்பது கர்த்தருடைய வேலை.

மேலே குறிப்பிட்ட வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் நான்கு விதமான உருவகங்களை குறிப்பிடுகின்றார். அவற்றைக் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. உக்கிராணக்காரன்

**1தீமோத்தேயு 2:2 அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.**

உக்கிராணக்காரன் என்றால் தன்னிடத்தில் நம்பி ஒப்புவிக்கப்பட்ட காரியத்தை பரிபாலிப்பவனே உக்கிராணக்காரன். தன்னை நம்பி, எதற்காக ஒப்படைக்கப்பட்டதோ அதை நிறைவேற்ற பிரயாசப்படுகின்றவன் தான் உண்மையான உக்கிராணக்காரன்.

**1கொரிந்தியர் 4:2 மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்.**

விரும்பினால் உண்மையாய் இருக்கலாம் அல்லது உண்மை இல்லாமல் விடலாம் என்று இல்லாமல் எப்போதும் உண்மையாய் இருப்பது தான் உக்கிராணக்காரனுக்கு அவசியம். உக்கிராணக்காரன் என்றால்: 'உண்மையுள்ளவன்' என்று பொருள்படும். எங்களை நம்பி தன்னுடைய விசுவாசத்தை ஒப்படைத்திருக்கின்றார், அதனைப் பெற்றுக் கொண்ட நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையுள்ள உக்கிராணக்காரராய் மற்றவர்களுக்கு கொடுக்கின்றோமா? கிறிஸ்தவ விசுவாசத்தை பெற்றுக் கொள்வது நமக்கு கிடைத்த வரப் பிரசாதமே. அதனை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது நம்முடைய கடமை. தேவனுடைய இரட்சிப்பு, விசுவாசம், அன்பு என்பன நாம் பெற்றுக்கொண்ட ஈவு அல்லது சலாக்கிய மாக இருக்கிறது. அதனை மற்றவர் களுக்கு சொல்ல வேண்டியது எம்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரராய் இருக்கின்றோமா?

**கலாத்தியர் 1:12 நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்.**

இந்த வார்த்தையை தீமோத் தேயுவுக்கு மாத்திரமல்ல முழுச்சபைக் கும் பகிரங்கமாக ஒரு நிருபமாக எழுதுவதனைக் காணலாம். எங்களு டைய வாழ்க்கையில் பல வேளைகளில் வேலை ஸ்தலங்களில் - அதிகாரிகள் கவனிக்கின்றார்களே என்றும், பாட சாலையில் - ஆசிரியர்கள் கவனிக்கின் றார்களே என்றும், வீட்டிலே - பெற்றோர் கவனிக்கின்றார்களே என்றும் அதற் காக உண்மையாய் இருக்க பிரயாசப் படுவோம். மாறாக யாரும் கவனிக்காத விடத்து, யாரும் எம்மை பார்க்காதவிடத்து எங்களுடைய உக்கிராணத்துவம் எப்படி இருக்கின்றது? என்று சற்று சிந்திக்க வேண்டியது அவசியம். மனுஷகுமாரன் வரும் நாளில் விசுவாசத்தைக் காண பாரோ என்றார் ஆண்டவர். அப்படிப்பட்ட துன்மார்க்கத்தனமான உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கு பார்த்தாலும் உண்மையில்லா நிலமை களும், கஸ்டங்களும் பெருகிக்கொண்டி ருக்கின்றது. இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நாமும் அதற்குள் இழுக்கப்பட்டு இருக்கின்றோமா? அல்லது அதைவிட்டுப் பிரிந்து பிரித் தெடுக்கப்பட்டவர்கள் நாங்களென்று உண்மையுள்ள உக்கிராணக்காரராய் இருக்கின்றோமா?

கையடக்கத் தொலைபேசிகளில் இணையத்தளம் வந்திருக்கின்றது. தொழில்நுட்பகாரியங்கள் மலிந்துபோய் மனிதனுக்கு உதவ வேண்டிய - கைகொடுக்க வேண்டிய தொழில்நுட்பம் மனிதர்களை சீர்குலைத்து அவர்களு டைய வாழ்க்கையை சின்னாபின்ன மாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல் லாம் உக்கிராணக்காரர் என்ற நிலை யில் உண்மையோடு பயன்படுத்துகின் றோமா? என்று நம்மை நாமே பார்த்துக் கேட்க வேண்டிய மிகப்பெரிய கேள்வி யாக இருக்கின்றது. அமெரிக்கா தேசம் பாவம் பெருக்கெடுத்து ஓடுகின்ற தேசம். எப்படிப்பட்ட பாவத்தையும் எங்கும், எப்போதும் செய்யலாம். யாரும் யாரையும் கட்டுப்படுத்த முடியாது. அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான தேசம். எல்லோருக்கும் எல்லாவற்றிலும் சுதந்திரம் வழங்கப் பட்டிருக்கின்றது. பாவத்தை பாவம் என்று சுட்டிக்காட்டப்பயப்படுவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையின் மத்தியில் அங்கே இருக்கின்ற ஒரே வேதாகம கல்லூரியில் படிக்கின்ற அத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கும் இணையத்தள வசதி இருக்கின்றது. அவைகள் அனைத்தும் இலவசமாக பயன்படுத் தக்கூடியதாக இருந்தாலும் ஒவ்வொரு காரியத்திற்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இதனை நான் பார்த்து ஆச்சரியப்பட்டேன். இப்படிப்பட்ட தேசத்திலும் உண்மையான தேவ மனிதர்களை உருவாக்க பிரயாசப்படு கின்ற ஒரு வேதாகமக் கல்லூரி. அதில் கற்பதற்கு ஆண்டவர் எனக்கும் உதவி செய்தார். இன்றைக்கு யாழ்ப்பாணத் தின் நிலை என்ன? எல்லோருடைய கையிலும் தொலைபேசி இருக்கின்றது, அதை எவ்வாறு பயன்படுத்துகின் றோம்? உண்மையுள்ள உக்கிராணக் காரன் என்பதனை உணர்ந்து கவன மாய் செயற்படுவோம். கர்த்தர் நம்பி நமக்கு ஒப்புக்கொடுக்கின்ற கரியங்களை கவனமாக பயன்படுத்த பிரயாசப்படு கின்றோமா?

சுவிசேஷம், தேவனுடைய ராஜ்ஜியம், இரட்சிப்பு, பாவமன்னிப்பின் நிச்சயம் இவைகளை மறைவாக அல்ல: சாட்சிகள் கொண்டதாக எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை பெற்றுக் கொண்ட நாம் காத்துக் கொள்வது மாத்திரமல்ல, மற்றவர் களுக்கும்சொல்ல வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நாம் எத்தனை பேர் நாளைக்கு இருப்போமோ தெரியாது. இன்றைக்கு நண்பர்களாய் இருப்பார் கள், நாளைக்கு அவர்கள் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட கொடூரமான உலகத்திலே வாழுகின்ற நானும் நீங்களும் இரட்சிக் கப்படாமல் தேவனுடைய அன்பை ருசிபார்க்காமல் நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற இப்படிப்பட்ட மக்களுக்கு தேவனுடைய அன்பையும், ஈவையும் பற்றிச் சொல்வது யார்? நாமே உக்கிராணக்காரராய் இருக்கின்றோம். அதனை சொல்லாமல் விடுகின்றபோது அந்த பாதிப்பு நமக்கே என்பதனை புரிந்து கொள்வோம்.

# 02. போர் வீரன்

**11தீமோத்தேயு 2:3-4 (3.) நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி. 4. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான்.**

தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் பிசாசோடு போராட ஆயத்த மாயிருக்க வேண்டும். பிசாசோடு மாத்திரமல்ல, தீமையோடும், பிழையான போதகங்களோடும், பிழையான உப தேசங்களோடும் நாம் நாளாந்தம் போராட வேண்டியவர்களாக இருக்கின் றோம். கர்த்தருடைய அடிப்படை சத்தியம், உபதேசங்களை விட்டு வழிவிலகிப் போகப்பண்ணுகின்ற உபதேசங்கள் மலிந்துபோய் இருக்கின் றது. இப்படிப்பட்ட புது உபதேசங்கள், புதிய காரியங்களை கேட்கின்ற போது எங்களுடைய விசுவாசங்கள் பல வேளைகளில் ஆட்டம் காண ஆரம் பிக்கும். எங்களுடைய வாழ்க்கையை, விசுவாசத்தை சீர் குலைக்கத்தக்கதான உபதேசங்கள் வருகின்ற போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றையெல்லாம் போராடி மேற்கொள்ள நானும் நீங்களும் உண்மையுள்ள போர் வீரர்களாய் இருக்க வேண்டியது அவசியம். உக்கிராணக்காரன் மாத்திரமல்ல, யுத்தவீரனாகவும் இருக்க வேண்டும். இந்த ஆலயத்திற்கு சென்றால் பாவத்தைக் குறித்தே எப்போதும் பேசுவார்கள். அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே, இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சட்டதிட்டங்கள் போடுவார்கள். ஆனால் இந்த இடத்திற்கு சென்றால் சுதந்திரமாக இருக்கலாம், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஜனங்களை திசை திருப்ப முற்படுகின்றார்கள்.

எனவே செழிப்புக்களையும் ஆசீர்வாதங்களையும் ஜனங்கள் பார்க்கின்ற போது அதை நாடிச்செல்கின்றார்கள். இன்றைக்கு பிழையான போதகங்கள், தீமைகள், பிசாசு இவற்றோடு நாளாந்தமும் போரடவே அழைக்கப்பட்டிருக்கின்றோம். இந்த போர் வீரனைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் மற்றறைய சில நிருபங்களிலும் விளக்கிகாட்டி இருக்கின்றார்.

**எபேசியர் 6:14-17 (14.) சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்: 15. சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்: 16. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். 17. இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

இவைகளைப்பிடித்துக்கொண்டு போர் வீரராய் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்று பவுல் சொல்கின்றார். போர் வீரர்களாய் அழைக்கப்பட்ட நாம் ஒடுங்கிப்போய், பாதுகாப்பான இடத்தைத் தேடிப்போகின்றவர்களாய் அல்ல, மாறாக போராடி பிசாசை மேற்கொள்ள வேண்டும். இந்த போர் வீரர்கள் உபத்திரவத்தையும், உயிர் ஆபத்தையும் பார்த்து என்னால் இனி போராட முடியாது என்று கூறி பின்வாங்குகிறவர்கள் அல்ல. போராட அழைக்கப்பட்ட நானும் நீங்களும் தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்க வேண்டும்.

உபத்திரவத்தையும், உயிர் ஆபத்தையும் எந்த நேரமும் சந்திக்க நேரிடலாம் போன்ற வார்த்தைகளை கேட்க பயப்படுகின்றோம். ஆனால் ஆண்டவர் உன்னை செழிப்பாக்குவார், அதைத்தருவார், இதைத் தருவார் என்று செழிப்பின் உபதேசங்கள் எங்களை நோக்கி வருகின்ற போது, நல்ல வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள் கிடைக்கின்ற போது பல வேளைகளில் அவைகளை நாடிச் செழிப்பை நாடிப் போகின்றோம். ஆனால் பிரியமான தேவஜனமே, உபத்திரவத்தையும், உயிர்ஆபத்தையும் சந்திப்பதற்காகவே போர் வீரர்களாய் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதனை மறந்து விடக் கூடாது. சுவிசேஷத்திற்காக உண்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருப்பவர்களுக்கு சௌக்கிய வாழ்க்கை இல்லை.

**11தீமோத்தேயு 2:4 தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான்.**

போர் வீரன் எதற்காக அர்ப்பணிக்கப்பட்டானோ அந்த அர்ப்பணத்தை மீறி வேறு எந்த அலுவல்களிலும் அவன் ஈடுபடமாட்டான். ஒரு யுத்த களத்திலே போர் வீரர்கள் நிற்கின்ற போது அந்த இராணுவத் தளபதி என்ன சொல்கின்றானோ, என்ன முடிவு எடுக்கின்றானோ அதற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல், மாற்றுக் கருத்து தெரிவிக்காமல் அவர்கள் அந்த இடத்திலே செயற்படவேண்டும். அது தான் போர்வீரனுடைய வேலை. தேவனுடைய, கிறிஸ்துவின் போர்வீரர்களாய் அழைக்கப்பட்ட நாம் எங்களுடைய தலைவர்கள் என்ன சொல்கின்றார்களோ அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்காமல் அதனை அப்படியே செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றோம். மரிக்கும் வரைக்கும், கிறிஸ்துவுக்கு உண்மையாக இருந்து பிசாசின் தந்திரங்களை மேற்கொள்வதற்காகவே அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

## 03. விளையாட்டு வீரன்

**11தீமோத்தேயு 2:5 மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்.**

ஒரு யுத்த வீரனாக/போர் வீரனாக மாத்திரமல்ல, விளையாட்டு வீரனாகவும் நானும் நீங்களும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இந்த விளையாட்டு வீரனுக்கும் போர் வீரனுக்கும் இடையில் இருக்கின்ற ஒற்றுமை என்னவென்றால், இரண்டு பேரும் சட்டதிட்டங்களை கடைப்பிடித்து அதன்படி செய்ய வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒழுக்கம் நிறைந்த, சட்டதிட்டங்களைக் கொண்ட வாழ்க்கை. யுத்த வீரராக, போர் வீரராக அழைக்கப்பட்டிருக்கின்ற நானும் நீங்களும் எங்களுக்கென்று என்ன சட்டதிட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அதனைப் பின்பற்றி செயற்பட அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதனை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. நாங்கள் நினைத்தபடி, விரும்பியபடி, இஸ்டப்படி, சுயத்தின்படி நாம் வாழ முடியாது. நாம் நினைத்ததை சாதிக்க முடியாது. இதனை நான் செய்யலாம், இது என்னுடைய உரிமை யாரும் இதனை கேட்க முடியாது என்று உரிமை கோஷம் போடமுடியாது. மாறாக எங்களுக்கென்று என்ன சட்டதிட்டம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அதை கவனமாக செய்து பிரயாசப்பட வேண்டியது அவசியம்.

விளையாட்டுவீரனைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு கூறுகின்றார்.

**1கொரிந்தியர் 9:25 பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள்,**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.**

பவுல் ஓட்டப்பந்தயக் காட்சியை கொரிந்தியருக்கு முன் வைக்கின்றார். ஆண்டவருடைய விசுவாசத்தையும், இரட்சிப்பையும், கிருபையையும் பெற்றுக் கொண்ட நானும் நீங்களும் இறுதி மூச்சு வரை பரலோகமாகிய அந்த இலக்கை அடையும் வரைக்கும் ஓடும்படியாக அழைக்கப்பட்டிருக்கின் றோம். ஓடுகின்ற போது வாழ்க்கையில் எத்தனையோ சோர்வுகள், பிரச்சினை கள், அதைரியங்கள், அவமானங்கள், நிந்தனைகள், ஏளனங்கள் இவற்றை எல்லாம் பார்த்து சோர்ந்துபோய் என்னால் ஓடமுடியவில்லை என்று ஓட்டத்தை விட்டு ஒதுங்கிப் போகக் கூடாது. மாறாக கிறிஸ்து நமக்கு நியமித்திருக்கின்ற இலக்காகிய பரலோகத்தை அடையும்படிக்கு நாம் பொறுமையோடே ஓடக்கடவோம் என்று தேவனுடைய வார்த்தை கூறு கின்றது. ஓட்டத்தின் முடிவில் அழி வுள்ள கிரீடத்தைப் பெற அப்படிச் செய்கின்றார்கள் என்று பவுல் சொல் கின்றார். எனக்கும், உங்களுக்கும் அழியாத கிரீடங்கள் பரலோகத்தில் தேவன் வைத்திருக்கின்றார். அதைப் பெற்றுக் கொள்ள எத்தனைபேர் பிரயாசப்பட்டு ஓடிக் கொண்டிருக் கின்றோம்.

உலகப்பிரகாரமான ஓட்டத்திலே யார் முதல் வருகின்றானோ அவனுக்கு கிரீடம். ஆனால் ஆவிக்குரிய ஓட்டத் தில் முதல் வருபவன் அல்ல, சாதனை படைப்பவன் அல்ல: யாரெல்லாம் உண்மையாக பொறுமையாக ஓடி இலக்கை அடைகின்றார்களோ அத்தனை பேருக்கும் ஆண்டவர் ஜீவ கிரீடத்தை வைத்திருக்கின்றார்.

*ஒரு நீண்ட மரதன் ஓட்டப் போட்டி ஓடிக்கொண்டிருக்கும் ஒருவன் ஓடி சாதனை படைத்து விட்டான். அனேக ஜனங்கள் மைதானத்தில் கூட இருக்கையில் ஓடுகின்றவர்களில் ஒருவனுக்கு தொடர்ந்து ஓட முடியாமல் வெப்பம் காரணமாக தலைச்சுற்று ஏற்பட்டுவிட்டது. அவன் ஓடுகின்ற ஓட்டத்தில் இருந்து அவனை வெளியே கொண்டு வர உதவி யாளர்கள் வந்துவிட்டார்கள். அவனால் இயலாத நிலைமை யிலும் இல்லை, நான் ஓடப்போகி றேன் என்னை தடுக்க வேண்டாம் என்று உதவியாளர்கள் தனக்கு அருகில் வர தடுத்துவிட்டான். ஓடுகின்றான், சில வேளை நடக்கின்றான், தள்ளாடி தள்ளாடி சென்று கொண்டிருக்கின்றான். சொற்ப நேரத்தில் அவன் எல்லைக் கோட்டைத் தாண்டு கின்ற போது அரங்கத்திலே இருந்த முப்பதினாயிரம் பேரும் எழுந்து நின்று கரங்களை தட்டி வாழ்த்தி னார்கள். முதலில் ஓடி சாதனை படைத்தவனுக்கு கூட அப்படிப் பட்ட மரியாதை கிடைக்கவில்லை. மாறாக என்னதான் கஸ்டம், வியாதி ஏற்பட்டாலும் நான் இலக்கை அடைய வேண்டும் என்று பிரயாசப்பட்டான்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமானவர்களே, வாழ்க்கைப் பாதையில், கிறிஸ்தவ ஓட்டத்தில் ஓடும்படியாக அழைக்கப்பட்டு: வியாதிகள், நெருக்கங்கள், அவமானங்கள், நிந்தைகள் தொடர்ந்து ஓட முடியாமல் என்னால் ஓட முடியவில்லையே என்று ஒரு போதும் ஓட்டத்தை விட்டு வெளியே வராமல் இயலாத சூழ்நிலையிலும் பொறுமையோடு அமைதியாய் தொடர்ந்து ஓடி முடித்தால் ஜீவ கிரீடத்தை தக்க வைத்துக் கொள்வோம்.

## 04. விவசாயி

**11தீமோத்தேயு 2:6 பிரயாசப் பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்.**

விவசாயிக்கு ஒப்பிட்டு காண்பிக்கின்றார். பலனை எதிர்பார்த்து கடினமாய் உழைக்கும் விவசாயி. சொகுசான வாழ்வு விவசாயிக்கு கிடையாது. தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு சொகுசான வாழ்க்கை அவசியம் என்று எதிர்பார்க்கின்றோம். அனைத்தும் நன்றாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் நாம் கடினமாக உழைக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகின்றார். கடின உழைப்பில் பலனைக் கண்டு கொள்ளலாம். ஒரு விவசாயி அறுவடைக்காக பொறுமையோடே காத்திருக்க வேண்டும். அவசரப்படக்கூடாது. இன்றைக்கு விதைத்ததை இன்றைக்கே அறுக்க வேண்டும் என்றல்ல, என்னால் கடினப்பட்டு, பிரயாசப்பட்டு விதைக்கப்பட்ட விதை எத்தனையோ நாட்களுக்கு பிற்பாடு பலனைக் கொடுக்கும். எத்தனை காலங்களுக்கு முன்பதாக கடினப்பட்டு, பிரயாசப்பட்டு, மிஷனெரிமார்களாக சென்று தேவனுடைய வார்த்தையை விதைத்தார்கள். அப்போது அதனை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியாக அவர்களுடைய சரீரமும் அதே இடத்தில் விதைக்கப்பட்டது. எந்த பலனையும் அவர்கள் காணவில்லை. ஒருவரும் இரட்சிக்கப்படவில்லை, அவர்கள் மரித்தார்கள். ஆனால் எத்தனையோ ஆண்டுகளுக்கு பிற்பாடு இப்போது அந்த இடங்களிலே கர்த்தருடைய கிரியை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. என்றைக்கோ விதைத்த விதை இன்றைக்கு பலனைக் கொடுக்கின்றது.

எல்லாம் உடனடியாக நடைபெற வேண்டும், ஏன் நடைபெறவில்லை என்று அவர்கள் பின்வாங்கியிருந்தால் இன்றைக்கு எப்படி இருந்திருக்கும். பலனைக் காணாவிட்டாலும் கடினமாய் பிரயாசப்பட்டு உழைத்தவர்கள். அவர்கள் உலகத்தில் இல்லாவிட்டாலும் அவர்கள் விட்டுச் சென்ற விதை இன்றைக்கு பலனைக் கொடுக்கின்றது. இன்றைக்கெல்லாம் உடனடியாக நடைபெறுகின்றது. நாம் வாழும் இந்த உலகமும் உடனடி உலகமாய் இருக்கின்றது. ஆகவே நாங்களும் உடனடியாக காரியங்கள் நடைபெற வேண்டும், கர்த்தர் செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றோம். கடினப்பட்டு உழைத்தால் அதன் பலனுக்கு பொறுமையோடு காத்திருக்க வேண்டியது அவசியம். விவசாயி நேரத்தைப் பார்த்து வேலை செய்கின்றவன் அல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம், காலம், மழை, வெயில் பாராமல் உழைக்க வேண்டும். அவன் தான் உண்மையான விவசாயி.

தேவனுடைய பிள்ளைகளாகிய எம்மை நம்பி தன்னுடைய மகத்தான காரியங்களை ஒப்படைத்திருக்கின்றார்.

அந்த காரியங்களுக்கு உண்மையுள்ளவர்களாக, உக்கிராணக்காரராக இருக்கின்றோமா?

யுத்த வீரர்களாய் பிசாசின் தந்திரங்கள் வரும் போது போரிட்டு மேற்கொள்கின்றோமா?

விசுவாசத்தை இறுதிவரை கொண்டு சென்று பொறுமையாய் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற விளையாட்டு வீரனாய் இருக்கின்றோமா?

அதை மற்றவர்களுடைய வாழ்கையில் கடினப்பட்டு விதைக்கின்ற விவசாயிகளாய் இருக்கின்றோமா?

இந்த நான்கு விதமான காரியங்களை புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய எம்மிடம் காணப்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியக்காரரை போராடுங்கள் என்று சொன்னார் என்று அல்ல மாறாக தேவனுடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்ட நாம் அனைவரும் ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருக்கின்றோம். எனவே நாம் அனைவரும் தேவனுக்காய் போராடி எமது விசுவாசத்தைக் காத்துக் கொண்டு மற்றவர்களையும் அவரண்டைக்கு நடத்திச் செல்வோம். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது, ஆயத்தமாவோம்! ஆயத்தப்படுத்துவோம்!!.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி – 120

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தானியேல் (தானியேல் 10:17)
03. அகினோவாம் (11சாமுவேல் 3:2)
05. தாத்தான் (எண்ணாகமம் 26:9)
07. யாகேல் (நியாயாதிபதிகள் 5:24)
09. அகசியா (11இராஜாக்கள் 9:27)
11. அப்சலோம் (11சாமுவேல் 18:18)

**வலமிருந்து இடமாக**

02. கீதரோன் (1இராஜாக்கள் 2:37)
04. யாஷோபியாம் (1நாளாகமம் 11:11)
06. சாலொமோன் (11சாமுவேல் 12:25)
08. ஊரி (11நாளாகமம் 1:5)
10. மக்னாயீம் (ஆதியாகமம் 32:2)

**மேலிருந்து கீழாக**

01. தானியேல் (தானியேல் 7:15)
02. கீரியாத் செப்பேர் (நியாயாதிபதிகள் 1:11)
03. அத்தாளியாள் (11நாளாகமம் 22:12)

**கீழிருந்து மேலாக**

11. அர்னோன் (எண்ணாகமம் 21:13)
12. பேரேஸ் ஊசா (1நாளாகமம் 13:11)



# குறுக்கெழுத்துப் போட்டி - 120, வினா விடை - 122

## சரியான விடை எழுதியவர்கள்

**பாண்டவெட்டை**

01. சு.சுதாகரன்
02. ற.ஜெசிந்தா
03. நா.றமேஸ்
04. சு.சுதர்சன்
05. ஜே.நிம்சிகா
06. வி.கெத்சியாள்
07. மோ.ஜெசிந்தா
08. சி.சுமித்திரா
09. சி.சிவனேஸ்வரன்
10. சு.திரிசாள்
11. சு.பராசக்தி

**காரைநகர்**

12. வி.அனுராதா
13. நா.அன்னாள்

**மானிப்பாய்**

14. பி.நேசமணி +

**அனலைதீவு**

15. ரு.சலோமி
16. ச.சர்பினா
17. க.நிதர்சிகா
18. ப.பவிசாளினி
19. ச.வைஸ்ணவி

**தர்மபுரம்**

20. பி.கலைச்சுடர்
21. வ.வசிகலா
22. சி.வளவன் +
23. வ.வானுசன் +

**வேரவில்**

24. அ.சுதர்சினி

**யாழ்ப்பாணம்**

25. எஸ்.திஸ்பியா *

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்

மனம் திரும்புதலைப்
பொறுத்து ஜெபம்
கேட்கப்படும்.
பரிசுத்தத்தைப்
பொறுத்து ஜெபம்
கேட்கப்படும். ஆனால்
அதிகாரத்தைப்
பொறுத்து
(ஸ்தானத்தை) ஜெபம்
கேட்கப்படுவதில்லை!

தேவன் கொடுக்கும்
தூய்மையின் மாற்றம்
சமூக மாற்றத்தையும்
உண்டுபண்ணும்

பிரசித்தம்
அடைவதைவிட
பிதாவின் சித்தம்
செய்வதே மேலானது!

போத்தியாரின்
மனைவியின்
கரங்களில்
யோசேப்பின்
வஸ்திரம்
இருந்ததென்பது
ஆதாரத்துடன் இருந்த
உண்மை; ஆனால்
ஆதாரத்தைவிட
உண்மைதான்
உண்மையானது.

போத்தியாரின்
மனைவியின் கரங்களில்
யோசேப்பின் வஸ்திரம்
இருந்தது உண்மை;
ஆனால் அவன் அந்தப்
பாவத்தைச்
செய்யவில்லை என்பதே
உண்மையான உண்மை!

அசுத்தத்தைவிட்டு
வெளியே வந்தவர்கள்
பரிசுத்த ஜாதி என்ற
தேவனுடைய பக்கம்
வரவேண்டும்

*— Ps. VM —*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிருபம்

இந் நிருபம் மிகவும் ஆழமான இறையியலைக் கொண்ட நிருபமாகும். சபைச் சரித்திரத்தில் முக்கியமானதொன்றாக இந் நிருபம் காணப்படுகிறது. ரோம நிருபம் எழுதும் போது சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரும்படி அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார். அத்துடன் நவீன சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த நிருபமாகவும் ரோமர் நிருபம் காணப்படுகிறது.

**ரோமர் 1:17 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.** நவீன கால கிறிஸ்தவ சீர்திருத்தவாதியான மாட்டின் லூதர் அவர்களைத் தொட்ட வசனம் இது. இதனைக் குறித்த சிறப்பான விளக்கங்களை மாட்டின் லூதர் எழுதியிருக்கிறார்.

ரோமர் நிருபம் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் எழுதப் பட்டதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களாலே உருவாக்கப்படாத அத்துடன் அவர் இதுவரை சந்திக்காத ஒரு சபைக்கு எழுதப்பட்டது. மேலும் அப்போஸ்தலர்களால் உருவாக்கப்படாத இச்சபை எப்படி உருவாகி யிருக்கலாம் எனில், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் உள்ளவண்ண மாக அன்று இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளால் உருவாக்கப்பட்டிருக்கலாம். அல்லது அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தின்படி சிதறடிக்கப்பட்ட விசுவாசிகள் மூலமாக ரோம சபை உருவாக்கப்பட்டிருக்கலாம் என வே அறிஞர்கள் கருதுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்போஸ்தலர் 8:1-4 (1.) அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். 2. தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங் கொண்டாடினார்கள். 3. சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். 4. சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.**

சாதாரண விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட ரோம சபையில் அதிகமான உபதேச தவறுகள், உபதேசக் கோளாறுகள் காணப்பட்டிருக்க வேண்டும். இதினிமித்தமாக ரோமாபுரியிலுள்ள சபைக்கு நேரடியாகச் செல்ல வேண்டுமெனவும் அப்போஸ்தலனாகிய பவுல் விரும்பினார். ஆனால் தடையுண்டாகியிருந்தது. **ரோமர் 1:13 சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.**

எனவே அங்கு சென்று ரோம சபையைச் சந்திக்க அந்நேரத்தில் முடியாமல்போனதாலே இந் நிருபத்தை ரோமாபுரியிலுள்ள சபைக்கு பவுல் எழுதினார். இந் நிருபம் கிறிஸ்தவ சபைக்கான அடிப்படைச் சத்தியத்தைக் கொண்டுள்ளது.

தொடரும்....

*'பைபிளை நம்புவதற்கு
நீங்கள் உங்கள் புத்தியைக்
கைவிட வேண்டியதில்லை.
உங்கள் பெருமையை
நீங்கள் விட்டுவிட வேண்டும்.'*
*- ஆர்.சி.ஸ்ப்ரூல் -*

*எந்த அளவிற்கு ஒரு மனிதன்
தேவனுடன் நெருங்கி
வாழ்கிறானோ, அந்த
அளவிற்கு தன்னுடைய
துன்மார்க்க இருதயத்தைக்
குறித்து துக்கப்படுவான்*
*- சார்லஸ் ஸ்பர்ஜன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வேதப்பகுதி: சங்கீதம் 1:1-6**

ஒருவர் ஒரு வீட்டை எதற்குக் கட்டுகின்றார்? அந்த வீட்டில் தங்குவதற்காக. ஒரு பீரோவை ஒருவர் எதற்காக வாங்குகிறார்? தன்னுடைய பொருட்களைப் பத்திரமாக வைப்பதற்காக. சரி உன்னிடம் ஒரு கேள்வி: 'தேவன் உன்னைப் படைத்தார்' என்று நம்புகிறாயா? ஆம், நிச்சயமாக நம்புகிறேன் என்று சொல்வாய். அப்படியானால் உன்னை தேவன் எதற்காக படைத்தார்? என்று யோசித்தாயா?

தேவன் அவருக்காகவே உன்னைப் படைத்தார். நீ அவருக்கு பிரியமானதைச் செய்ய வேண்டும். நீ அவரோடு இணைந்து அவருடைய பிள்ளையாய் வாழ வேண்டும். அவரிடம் இருக்கும் நல்ல குணங்களை நீ வெளிப்படுத்த வேண்டும். உன்னைப் பார்க்கின்றவர்கள் நீ தேவனுடைய பிள்ளை என்று அறிந்து கொள்ள வேண்டும். நீ அவ்விதமாய் வாழ்ந்து காட்ட வேண்டும்.

**சிந்தனைக்கு:-**

**தேவன் ஒரு நோக்கத்துடன் நம்மை படைத்தார். அந்த நோக்கம் நிறைவேறும் விதமாக நாம் வாழவேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்'

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org